# *திருத்தம்*

# மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
# வடக்கு மாகாணம்

## வடக்கு மாகாண பொதுச்சேவையின் முன்பள்ளி ஆசிரியர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

**17.05.2017**ம் திகதிய தினக்குரல், உதயன் மற்றும் வலம்புரி ஆகிய பத்திரிகைகளிலும் **18.05.2017**ம் திகதிய தினமின மற்றும் லங்காதீப ஆகிய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு வடக்கு மாகாண இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பரீட்சைக்கான விளம்பரத்தின் **பந்தி 05** இல் கூறப்பட்ட விடயங்களுக்கு பதிலாக பின்வரும் பந்திகள் பிரதியீடு செய்யப்படுகின்றது.

**05.1 கல்வித் தகைமைகள் :-**

க.பொ.த (சா/த) பரீட்சையில் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன். அவற்றில் ஏதாவது மூன்று (03) பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**05.2 தொழில்க் கல்வி / தொழில்முறைத் தகைமைகள் :-**

பல்கலைக்கழகம் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து

**அல்லது**

உயர் கல்வி அமைச்சு / மூன்றாம்நிலை தொழில்க்கல்வி அமைச்சு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றிலிருந்து

**அல்லது**

சிறுவர் செயலகத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதாவதொரு நிறுவனம் ஒன்றிலிருந்து

**முன்பள்ளிக் கல்வி தொடர்பான ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமாச் சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.**

அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதியானது **28.02.2018**ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் தகைமைகள்யாவும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கொண்டிருத்தல் வேண்டும்.

ஏற்கனவே **17.05.2017**ம் திகதிய தினக்குரல், உதயன் மற்றும் வலம்புரி ஆகிய பத்திரிகைகளிலும் **18.05.2017**ம் திகதிய தினமின மற்றும் லங்காதீப ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும் என்பதுடன் அவ்விளம்பரத்திற்கு அமைவாக ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கவேண்டிய தேவைப்பாடு இல்லை. மேலும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**சி.ஏ.மோகன்ராஸ்.**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
**12.02.2018**